சுருக்கம்

சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டத்துறை — புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் — ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது) — உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்–3வது திட்டம் ஆகிய திட்டங்களில் பணியாற்றும் பள்ளி சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள்/தொகுப்பு மதிப்பூதிய பணியாளர்களுக்கு சிறப்பு வருங்கால வைப்பு நிதி பணிக் கொடைத் திட்டம் அரசின் பங்குத் தொகை — உயர்த்தி வழங்குவது — ஓய்வூதிய திட்டம் அறிமுகப்படுத்துவது தொகுப்பு மதிப்பூதியப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு அளித்தல் — சம்பந்தமாக ஆணைகள் வெளியிடப்படுகிறது

---

சமூகநலம் (ம) சத்துணவு (சதி2) திட்டத்துறை

அரசாணை (நிலை) எண் 62

நாள் 28.4.2005

படிக்கப்பட்டது:-

1) அரசாணை (நிலை) எண் 70/ச.ந.(ம)ச.தி.துறை நாள் 23.04.1998
2) தமிழக அரசின் 2005–2006 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை, பத்தி 161–164 வரை

ஆணை:

பார்வை ஒன்றில் படிக்கப்பட்டுள்ள அரசு ஆணையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது) மற்றும் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் ... திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் பள்ளிச் சத்துணவு ... பணியாளர்கள்/ உதவியாளர்கள் ஆகியவர்களுக்கு 1–1–1996 முதல் மதிப்பூதியம் ரூ450/- மற்றும் ரூ.400/- என நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் (Special Provident Fund-Cum-Gratuity Scheme) சத்துணவு ஊழியர்களுக்கு விரிவுபடுத்தி அரசின் பங்காக ரூ5000/- அவர்கள் ஓய்வு பெறும் பொழுது வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2) தற்பொழுது 2005–2006ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது) மற்றும் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள்–3வது திட்டம் ஆகிய திட்டங்களில் பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி

78

பணியாளர்கள் மற்றும் சத்துணவு மையங்களில் பணிபுரியும் சமையலர்கள்/உதவியாளர்கள், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள்--3வது திட்டத்தில் பணிபுரியும் அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை–1 மற்றும் நிலை–2 போன்ற ஓய்வூதியம் இல்லாத பணிகளைச் சார்ந்த பணியாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்கள் ஓய்வு பெறும் பொழுது ஒட்டு மொத்த தொகை அளிக்கும் ஓய்வூதியத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி வரையறுக்கப்படாத ஊதிய விகிதங்களில் (Non-standard Time-Scale) ஊதியம் பெறும் சத்துணவு அமைப்பாளர்கள்/அங்கன்வாடி பணியாளர்கள் ஓய்வு பெறும் பொழுது ரூ50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஒட்டு மொத்த தொகையாக வழங்கவும், மேற்கண்ட திட்டங்களின் கீழ் தொகுப்பு மதிப்பூதியம் பெறும் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்கள் ஓய்வு பெறும் பொழுது ரூ20,000/–(ரூபாய்இருபதாயிரம் மட்டும்) ஒட்டு மொத்த தொகையாக வழங்கவும், பணியிலிருந்து ஓய்வு பெறும் பொழுது வழங்கப்படும் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டத்திற்கான (Special Provident Fund-Cum-Gratuity Scheme) அரசின் பங்களிப்பை ரூ5,000/– லிருந்து ரூ10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கவும் மற்றும் தமிழ்நாடு ஆறாவது ஊதியக்குழு பரிந்துரைத்தவாறு 1.1.1996அன்று மாதம் ஒன்றிற்கு ரூ.450/– தொகுப்பு மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள அங்கன்வாடி உதவியாளர் நிலை–1 மற்றும் சத்துணவு மைய சமையலர்களின் அடிப்படை தொகுப்பு மதிப்பூதியத்தில் மேலும் ரூ.330/– (ரூபாய் முன்னூற்றி முப்பது மட்டும்) உயர்த்தியும், தமிழ்நாடு ஆறாவது ஊதியக்குழு பரிந்துரைத்தவாறு 1–1–1996 அன்று மாதமொன்றிற்கு ரூ.400/– தொகுப்பு மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை–2 மற்றும் சத்துணவு மையத்தில் உதவியாளராக பணிபுரிபவர்களுக்கு அடிப்படை தொகுப்பு மதிப்பூதியத்தில் மேலும் ரூ.290/–(ரூபாய் இருநூற்றித் தொண்ணூறு மட்டும்)உயர்த்தி தரப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அகவிலைப்படி உயர்வு விதம் இந்த இரண்டு பிரிவினருக்கும் தற்போதைய நிலையே தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) மேற்கூறிய 2005–2006 நிதிநிலை அறிக்கையின் அடிப்படையில் அரசு கீழ்க்கண்டவாறு ஆணைகளை வெளியிடுகிறது.

i. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது) மற்றும் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்–3வது திட்டம் ஆகிய திட்டங்களில் பணியாற்றும் சமையலர்கள்/குழந்தைகள்நல உதவியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை–1 ஆகியவர்களுக்கு அவர்கள் ஆறாவது ஊதிய குழுவின் பரிந்துரையின் பேரில் 1–1–96 முதல் பெற்ற வந்த அடிப்படை தொகுப்பு மதிப்பூதியமாகிய ரூ.450/– உடன் மேலும் ரூ330/–, உயர்த்தி 1.4.2005 முதல் மாதம் ரூ.780/–ஆக நிர்ணயித்து அவர்கள் ஏற்கனவே பெற்றுவரும் அகவிலைப்படி உயர்வு ரூ.320/–ஐயும் சேர்த்து மாதம் ரூ1,100/– என்ற அளவிற்கு வழங்க ஆணையிடப்படுகிறது.

ii. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் உதவியாளர்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது),

ஆகியவர்களுக்கு அவர்கள் ஆறாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்பேரில் 1-1-96 முதல் பெற்று வந்த அடிப்படை தொகுப்பு மதிப்பூதியமாகிய ரூ400/- உடன் மேலும் ரூ290/- உயர்த்தி 1-4-2005 முதல் மாதம் ரூ.690/- ஆக நிர்ணயித்து அவர்கள் ஏற்கனவே பெற்று வரும் அகவிலைப்படி ரூ160/-ஐயும் சேர்த்து மாதம் ரூ.850/- என்ற அளவிற்கு வழங்க ஆணையிடப்படுகிறது. மேற்கூறிய இரண்டு இனங்களில் உள்ளவர்களுக்கு அவர்கள் தற்போது பெற்றுவரும் அகவிலைப்படி விகித நிலையே தொடரும்.

iii. வரையறுக்கப்படாத ஊதிய விகிதங்களில் ஊதியம் பெறும் அங்கன்வாடி பணியாளர் மற்றும் சத்துணவு அமைப்பாளர்கள் அவர்களுக்கு பணியிலிருந்து ஓய்வு பெறும் பொழுது ரூ50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஒட்டு மொத்தத் தொகையாக அளிக்கப்படும்.

iv. தொகுப்பு மதிப்பூதியத்தில் பணியாற்றும் ஊழியர்கள் அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும் பொழுது ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) ஒட்டு மொத்தத் தொகையாக அளிக்கப்படும்.

v. சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரசின் பங்களிப்பு தொகை ரூ5,000/-(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)இல் இருந்து ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்படுகிறது.

4) இவ்வாணைகள் அனைத்தும் 1-4-2005 முதல் அமுல்படுத்தப்படும்.

5) மேலே பத்தி 3(i) மற்றும் (ii)ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட இத்திட்டங்களுக்கான செலவினம் சம்பந்தப்பட்ட திட்டக் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும். இது தொடர்பான மேல் நடவடிக்கை உரிய நேரத்தில் தவறாமல் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6) மேலே பத்தி 3(iii) மற்றும் 3(iv)ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை கோரிக்கை எண் 43ல் புதிதாக துவக்கப்படவுள்ள கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படலாம்.

"2235-சமூகப் பாதுகாப்பும் நலனும் -60 ஏனைய பாதுகாப்பு நலத் திட்டங்கள்-200 ஏனைய திட்டப்பணிகள்-II மாநிலத் திட்டம் -JW அங்கன்வாடி பணியாளர் மற்றும் சத்துணவு அமைப்பாளர்களுக்கு ஒட்டு மொத்த தொகை அளித்தல் -09 உதவிமானியங்கள்-3 குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியம்" (த.தொ.கு 2235-60-200 JW 0933)

7) மேற்காணும் புதிய கணக்குத் தலைப்பிற்கு திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள்-3வது திட்டம், சென்னை-113 மதிப்பீட்டு கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார்.

சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்/கருவூல அலுவலர் மேற்கண்ட புதிய கணக்கு தலைப்பினை தங்களது கணக்குகளில் தொடங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8) மேலே பத்தி 3(v)ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படலாம்.

"2235-சமூகப் பாதுகாப்பும் நலனும் -60 ஏனைய சமூகபாதுகாப்பு நலத் திட்டங்கள் -200 ஏனைய திட்டப்பணிகள் BE தமிழ்நாடு அரசு பணியாளர் சிறப்பு வருங்கால வைப்புநிதி பணிக்கொடைத் திட்டம்-10 பங்குத் தொகைகள் -01 குறிப்பிட்ட நிதிக்கு தொகைக் கொடுத்தல்" (த.தொ.கு.2235-60-200-BE 1016).

9) இவ்வாணைகள் நிதித்துறையின் அ.சா.கு.எண்.13641/FS/P/05 நாள் 21.4.2005ன் இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

//ஆளுநரின் ஆணைப்படி//

எல்.என்.விஜயராகவன்
அரசு செயலாளர்

பெறுநர்

1) ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை-15
2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5
3) திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள்-3வது திட்டம், சென்னை-13
4) அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
5) அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
6) சம்பள கணக்கு அலுவலர், சென்னை (வடக்கு/தெற்கு/கிழக்கு) சென்னை79/35/05
7) ஆணையர், கருவூலம் மற்றும் கணக்கு இயக்ககம், சென்னை-15
8) அரசுத் துறை நிறுவன தணிக்கை தலைவர், சென்னை-18
9) அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், சென்னை/மதுரை/திருச்சி/சேலம்/கோயம்புத்தூர்/திருநெல்வேலி
10) சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை

நகல் :

1) நிதித் (CMBC) துறை, சென்னை-9
2) சமூகநல இயக்குநர், சென்னை-5
தலைமை அரசுத்துறை நிறுவன தணிக்கையர், செங்கல்வராயன் மாளிகை, 807, அண்ணாசாலை, சென்னை-2
3) ஓய்வூதிய இயக்குநர், 3வது பிளாக், டி.எம்.எஸ். வளாகம், தேனாம்பேட்டை, சென்னை-6
4) ச.ந-7/ச.ந-2 பிரிவு சென்னை-9
5) இருப்பு கோப்பு/உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

[illegible]
சென்னை-600005.

81